ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப்பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2116/48 - 2019 මාර්තු මස 28 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.03.28
*2116/48 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 28 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச.வ.பி. 15/2014*

***2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத்தொழில் அபிவிருத்திச் சட்டம்***

*2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 55 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 58 ஆம் பிரிவின்கீழ் வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

சஜித் பிரேமதாச,
வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும்
கலாசார அலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு.
*2019, மாச்சு 06.*

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள், 2019 ஆம் ஆண்டின் நிர்மாணத்தொழில் (தகவற் செயலகம்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 55 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் (இதனகத்துப்பின்னர் "அதிகாரசபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிர்மாணத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையினால் தாபிக்கப்பட்ட தகவற் செயலகத்தின் பணிகள், இதற்கான அட்டவணையின் பாகம் I இல் குறித்துரைக்கப்பட்டவாறாகவிருத்தல் வேண்டும்.

3. தகவற் செயலகத்தின் பணிகளை நிறைவேற்றுவதில் அதனால் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறை, இதற்கான அட்டவணையின் பாகம் II இல் குறித்துரைக்கப்பட்டவாறாகவிருத்தல் வேண்டும்.

4. தகவற் செயலகத்தின் பணிகளை நிறைவேற்றுவதில் அதனால் பேணப்படுவதற்கு தேவைப்படுத்தப்பட்ட செயல்நிறைவேற்ற நியமங்கள், இதற்கான அட்டவணையின் பாகம் III இல் குறித்துரைக்கப்பட்டவாறாகவிருத்தல் வேண்டும்.

1 A - PG 4457 - 507 (2019/ 03)
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## அட்டவணை

### பாகம் I

### தகவற் செயலகத்தின் பணிகள்

தகவற் செயலகத்தின் பணிகள் பின்வருவனவற்றைச் செய்வதற்காகவிருத்தல் வேண்டும் : -

(அ) நிர்மாணத் தொழிலில் தேசியத் தரவுத் தளமொன்றைப் பேணுதலும்;

(ஆ) அதிகாரசபைக்குச் செய்யப்பட்ட எழுத்திலான வேண்டுகோளின்மீது தகவலைப் பரப்புதலும்;

(இ) நிர்மாணத் தொழிலில் அக்கறை கொண்டுள்ளோரின் விவரக்கொத்துக்களைப் பேணுதலும்; அத்துடன்

(ஈ) உயர்தொழிலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களைத் தோற்றுவிக்கும் பகிரங்கத்துறை நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் வேறு கல்விசார் நிறுவனங்களுடன் இணைப்புக்களை உருவாக்குதலும்.

### பாகம் II

### நடவடிக்கை முறைகள்

(அ) தேசிய தரவுத் தளத்திற்காக பின்வரும் வகுதிகளிலான தரவு குறித்துரைக்கப்பட்ட படிவங்களினூடாக சேகரிக்கப்படுதல் வேண்டும் : -

(i) அளிக்கப்பட்ட நிர்மாணத்தொழில் வேலை;

(ii) கொண்டு நடாத்தப்படுகின்ற மற்றும் பூர்த்திசெய்யப்பட்ட நிர்மாணத்தொழில் வேலை;

(iii) நிர்மாணப் பொருள் மற்றும் ஆக்கக்கூறுகள் உட்பாய்வு;

(iv) தொழிலாளர் கோரிக்கை மற்றும் வழங்குகை;

(v) நிர்மாணத்தொழில் வேலைக்கான நிதிசார் வசதிகள்; அத்துடன்

(vi) பயிற்சி வழங்குதல் மற்றும் மனித வளங்களை அபிவிருத்தி செய்தல்.

(ஆ) சேகரிக்கப்பட்ட தரவானது, செய்முறைப்படுத்தப்படுதல், பகுப்பாய்வு செய்யப்படுதல் மற்றும் வெளியிடப்படுதல் வேண்டும் அல்லது நியம, அட்டவணை, வரைகலை வடிவங்களில் அல்லது வேறு ஏதேனும் தேவைப்படுத்தப்பட்ட முறையில் பொருட்கோடப்படுதல் வேண்டும்.

(இ) (i) அதிகாரசபையுடன் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள்; அத்துடன்

(ii) தகவல் முறைமைக்கு ஒப்பந் தெரிவிப்பவர்களுக்காக,

மென்பொருள் வடிவில் மின்னஞ்சல்களினூடாகவும் வன்பொருள் வடிவில் அஞ்சலினூடாகவும் தகவலைப் பரப்புதல்.

(ஈ) விவரக் கொத்துக்களுடன் இணைப்பதற்காக உயர்தொழில்சார் குழுக்களுக்கு இணைப்புக்களை வழங்குதல் உள்ளடங்கலாக ஒப்பந் தெரிவிப்பவர்களுக்கு அணுகத்தக்கவாறாக விவரக்கொத்துக்களில் பதிவு செய்யப்பட்ட அக்கறையாளர்களை நிரற்படுத்துதல்.

### பாகம் III

### செயல்நிறைவேற்ற நியமங்கள்

(அ) அதிகாரசபையானது அதன் எல்லா சொந்தத் தரவின்மீதும் பதிப்புரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஆ) வெளியிலிருந்து சேகரிக்கப்பட்ட எல்லாத் தரவுகளும் இயைபான மேற்கோள்கள் மற்றும் குறிப்பீடுகளுடன் இருத்தல் வேண்டும்.

(இ) செயலகத்தினால் வழங்கப்பட்ட எல்லாத் தகவல்கள் மற்றும் பரப்பப்பட்ட தரவுகள் காலத்துக்குக்காலம் செல்லுபடியாக்கப்படுதல் வேண்டும்.

(ஈ) செயலகமானது, பதிவு செய்யப்பட்ட அக்கறையாளர்களின் செம்மையானதும் பூரணமானதுமான விபரக் கொத்துக்களைப் பேணுதல் வேண்டும்.

*3 - 1068/3*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.